Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இஸ்லாமியப் பண்பாட்டில் கட்டிடக்கலை பெறும் இடம்

**முனைவர் ஹ. அல்தாஜ் பேகம் ,**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை - ஆய்வு மையம்,**
**ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி , குற்றாலம்.**



இஸ்லாமிய கட்டிடக்கலை என்பது இஸ்லாமிய மக்கள் தங்களுக்கே உரிய பாணியில் கட்டிடங்களை கட்டமைப்பதாகும் இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப கால முதல் இன்று வரை மதச்சார்பற்ற மற்றும் இஸ்லாமிய மார்க்க நெறிப்படி கட்டமைக்கப்பட்ட பரந்த அளவிலாகளிலும் பரப்பளவை உள்ளடக்கிய கட்டிடங்கள் ஆகும் பைசாண்டின் பாரசீகம் ஆகிய நாடுகள் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் நாடுகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்ற நாடுகளிலும் இஸ்லாமிய கட்டிடக்கலை வேரூன்றி இருப்பதை அறியலாம் இஸ்லாமிய கட்டிடக் கலைகளை பள்ளிவாசல் கல்லறை, அரண்மனை கோட்டைகள் தர்காக்கள் போன்றவற்றில் காணலாம் தென்கிழக்கு ஆசியாவில் இஸ்லாம் சமயம் வேரூன்றிய காலகட்டத்தில் சீனா மற்றும் இந்திய கட்டிடக்கலைகளிலும் இதை தாக்கம் செலுத்தின எனலாம். மேலும் இஸ்லாமிய எழுத்தணி கலை முக்கியமாக இஸ்லாமிய கட்டிடங்களை பள்ளிவாசல்,கல்லறை அரண்மனை, கோட்டைகள் மற்றும் தர்காக்களில் காணலாம்.

**இஸ்லாமியக் கட்டிடக் கலையின் பண்பாட்டு மரபும் அதன் கூறுகளும்:**

உலகில் மனிதன் வளர்ச்சியடையும் காலகட்டத்தில் சமூகமும் பொருளாதாரமும் வளர்ச்சி அடைவது இயல்பு. அச்சூழலில் சமூக, அரசியல், பொருளாதார வாழ்விற்கான பொருள்களும் பயன்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக வழிபாட்டுத் தலங்கள், மாளிகைகள், போருக்கான இடங்கள், புதைகுழிகள் போன்றவை கட்டிடக் கலைகளால் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைகின்றன. இவை அதற்கே உரித்தான செயல்பாடுகளை சிறப்பாகச் செய்து வருகின்றன. பண்பாடு, பழக்கவழக்கங்கள், நாகரீகம், கலாச்சாரம், பாரம்பரியம் , நம்பிக்கை போன்றவை கட்டடக் கலைகளால் செல்வாக்கு பெற்று சமூகத்திற்குத் தாங்கள் யார் என்பதை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான நம்பிக்கை முதலான கோட்பாடுகளுக்கும் நாகரிகம், பழக்கங்களுக்கும் தொடர்புகள் உள்ளன எனலாம். ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் பண்பாடுகளுக்கும் அதற்கே உரிய சிறப்பு தன்மைகள் அரங்கேறி இருக்கும் அவற்றின் வழியில் கலையின் வெளிப்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதன் விளைவாக கட்டிடக்கலையில் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளும் சேர்ந்து வளர்ந்து வரலாற்றில் ஒரு புரட்சி மிக்க சிறந்த கட்டிடக் கலையின் போக்கை தோற்றுவித்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது எனலாம். ஒவ்வொரு மனிதனையும் படைத்த இறைவனையும் நேரடியாக இணைப்பதற்கு உருவான சூழலுக்குரிய **வழிபாட்டுத்தலம்** தான் இஸ்லாமியப் பண்பாட்டின் தாக்கமாக இஸ்லாமியக்கட்டிடக் கலை சிறப்புற்று விளங்குகின்றது. உலகத்தின் எந்த மூலையிலும் இஸ்லாமியர்கள் இருந்தாலும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அவர்களுடைய அடிப்படையான வழிபாட்டுக்குரிய இடத்தை பண்பாட்டு மற்றும் கலாச்சார நெறியில் உருவாக்குவதில் கட்டிடக்கலை பற்பல அம்சங்களைக் கொண்டு வளர்ச்சி பெற்று வருகின்றது. கிழக்கு இஸ்லாமிய நாகரிகம் செம்மையான பள்ளிவாசல் கட்டிட அமைப்பாலும், சமயச்சார்பற்ற மத நல்லிணக்க அமைப்பாலும் தனியாகச் சிறப்பு அடையாளம் காணக்கூடிய வகையில் பங்காற்றி வருகின்றது. அவ்வகையில் இஸ்லாமிய கட்டிடக் கலையின் தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் இறைவனை வழிபடும் வழிபாட்டுத் தலங்களான மசூதிகள் என்ற பள்ளிவாசல்கள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

**முதலாவது பள்ளிவாசல் கட்டிடம்:**

“இஸ்லாம் ஏழாம் நூற்றாண்டில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்நாளில் தான் துவங்கியது”1. அப்போது மசூதி போன்ற **கட்டிடம்** உருவாக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான குஃபா பள்ளிவாசல் தான் முதலில் கட்டப்பட்டது. ஆனால் திருக்குர்ஆனின் வசனங்களின் கருத்துப்படி முகமது நபி(ஸல்) அவர்களுக்கு முந்தைய ஆதம் நபி, இப்ராஹிம் நபி, இஸ்மாயில் நபி, மூசா, ஈஸா நபிகள் முதலான இறைத்தூதர்களால் இஸ்லாம் உருவாகி பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது (திருக்குர்ஆன்3:96) என்று கூறப்படுகிறது.”அவர்களுள் ஒருவரான இப்ராஹிம் நபி மற்றும் அவர் மகன் இஸ்மாயில் அவர்களின் உதவியுடன் மக்காவில் காபா என்ற சதுர வடிவ கட்டிடம் கட்டப்பட்டது இது இஸ்லாமிய வரலாற்றில் கட்டப்பட்ட முதல் மற்றும் மிகப்பெரிய பள்ளி வாயிலாகத் திகழ்கிறது.” (திருக்குர்ஆன்2:7)இப்பள்ளிவாசல் ஒரே நேரத்தில் பல லட்சம் பேர் **தொழுகை** நடத்தக்கூடிய அளவு விசாலமான பரப்பளவை கொண்டதாகும்.

**ஆரம்பகால இஸ்லாமிய கட்டிடக்கலை:**

ஆரம்பகால இஸ்லாமியர்கள் கட்டிடங்களை எளிமையான வணக்கஸ்தலங்களா கவே உருவாக்கினர். தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்பவும் அவர்களின் சூழல், மூலப்பொருள் ஆகியவற்றிற்கும் சமூக கலாச்சாரங்களுக்கு ஏற்ற வகையிலும் கட்டிடங்களை நிர்மாணித்தனர் ஆரம்பகால பள்ளிவாசல்கள் மிகவும் எளிமையானவை பிறகுதான் அவை விஸ்வரூப வளர்ச்சியடைந்தது. மிகக் குறைந்த செலவிலேயே எளிய மக்களால் மிக எளிமையான கட்டிடங்கள் மலைவாழ் இடங்களிலும் கிராமப்புறங்களிலும் கட்டப்பட்டன. சொல்லப் போனால் பூக்களால் ஆன மூங்கில்களால் ஆன கூரை அமைப்பிலும், குடிசை வீட்டைப் போன்ற அமைப்பிலும் பள்ளிவாசல்கள் அமைந்திருந்தன. காலப்போக்கில் அவை சிறிது சிறிதாக மாற்றம் கண்டன எனலாம்.

**நவீனகால இஸ்லாமிய கட்டிடக்கலை:**

நவீன காலத்தில் இஸ்லாமிய க் கட்டிடக்கலை மதச் சார்பான சில மாற்றத்தையும் பெற்றுள்ளது. ஆனால் கூரைகளை அலங்கரிக்கும் குவி மாடம், மெலிதான கோபுர அமைப்புடைய மினாரா, மற்றும் பள்ளிவாசல் உள்ளே இடம்பெறும் மிம்பர் போன்றவை பள்ளிவாசலுக்குரிய சிறப்பான அம்சங்களாகும் இவை இன்னும் பாரம்பரிய வடிவமைப்பில் அமைக்கப்படுகின்றன. பிற பண்பாட்டுத் தாக்கங்களால் இஸ்லாமிய பண்பாட்டிலும் கட்டிடக்கலை மாற்றம் அடைந்துள்ளது எனலாம். இஸ்லாமிய கட்டடக் கலையின் வளர்ச்சி பெற்ற பள்ளிவாசலானது இஸ்லாமியர்களின் சமூக, சமய, பொருளாதார வளத்தை மதிப்பிட்டுக் காட்டும் ஒரு அளவுகோலாகவும் அமையப்

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் டெல்லியில் உள்ள ஜும்மா பள்ளிவாசல் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள மக்கா, மதீனா முதலான சிறப்புமிக்க பள்ளிவாசல்கள் புதிய மாறுதல்களுடன் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன கட்டிடக் கலையின் ஒவ்வொரு கூறுகளும் இதற்கான சான்றுகளாக காணப்படுகின்றன. இதில் சமூக, சமய ,பொருளாதார தாக்கத்தினை இனங்கான முடியும். **"ஐரோப்பியர்களின் வருகை, மேற்கத்திய கல்வி அதன் வழியான சிந்தனை மரபு உண்டாக்கிய தாக்கம், அவர்களாகவே மாறி விடுவதில் இருந்த ஆர்வம் போன்றவை தமிழர்களுக்கு நவீனம் என்ற சொல்லுக்கான கருத்தியல், செயல்பாட்டு தளங்களை அர்த்தப்படுத்த முயன்றன"2** எனலாம்.

**மசூதி:**

**'மசூதி'** அரபு மொழியில் **'மஸ்ஜித்'** என அழைக்கப்படு கிறது. இதனை,

"இஸ்லாமிய வழிபாட்டு இடம் என்றும் கூறலாம்." (இத்ரீஸ் ஏ.பி.எம், மக்கள் இஸ்லாம், இஸ்லாமிக் புக்ஹவுஸ்) மசூதி என்பது முஸ்லிம்களின் வணக்கத்திற்கான ஒரு ஆங்கிலப் பெயராகும் இது ஒரு தேவாலயம், ஜெப ஆலயம் அல்லது பிற மதங்களில் உள்ள கோவிலுக்குச் சமமானது. முஸ்லிம்களின் வணக்கத்தின் இந்த அரபி வார்த்தை மஸ்ஜித் என்பதாகும். இதற்கு 'ஊக்கம் அளிக்கும் இடம்' என்று பொருள். இஸ்லாமிய மையங்கள், இஸ்லாமிய சமுதாய மையங்கள் முஸ்லிம் சமூக மையங்கள் எனவும் மசூதிகள் அழைக்கப்படுகின்றன. ரமலான் மாதத்தில் முஸ்லிம்கள் மசூதிகளில் சிறப்பு பிரார்த்தனை மற்றும் சமுதாய நிகழ்வுகளுக்கு அதிக நேரம் செலவிடுகின்றனர். முஸ்லிம்களின் கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்பமாகவும் உலகின் முதல் பள்ளிவாசலாகவும் 'புனித காபா ' எனும் 'மஸ்ஜிதுல் ஹராம்' விளங்குகின்றது .

**இஸ்லாமிய பள்ளிவாசல் கட்டிடக் கலையின் கூறுகள்:**

இந்த மசூதியில் ஒவ்வொரு இஸ்லாமியனும் தங்கள் பிரார்த்தனைகளை பள்ளிவாசல் கட்டிடங்களின் உட்புறங்கள் அல்லது வெளிப்புறங்களில் செய்வதற்கு ஒன்று கூடுகின்றனர். இதனால் உலகளாவிய இஸ்லாமியர்களிடையே தொடர்ச்சியும் பாரம்பரியத்தையும் இதில் காணலாம். உலகெங்கிலும் உள்ள மசூதிகளின் கட்டிட அமைப்புகளில் சற்றே வேறுபாடுகள் உள்ளன. கட்டுமான பொருட்கள், வடிவமைப்பு ஒவ்வொரு இஸ்லாம் சமூகத்தின் கலாச்சாரம் பாரம்பரியம் மற்றும் வளங்களை சார்ந்துள்ளது. எனினும் பெரும்பான்மையான மசூதிகள் பொதுவான அம்சங்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன இவை பள்ளிவாசல்களில் கட்டடக்கலை கூறுகள் ஊடாக இனம் காணப்படுகின்றன அந்த வகையில் கட்டடக் கலையைப் பற்றி நுட்பமாகப் பார்க்கும் பொழுது, மசூதியின் வெளியே மெல்லிய கோபுரத்தைக் குறிக்கும் மினாரா என்பது தனித்துவமான பாரம்பரிய அம்சமாகும்.

**மினாரா:**

மினாரா சதுரமாக , எண் கோணமாக இருக்கலாம் கூட இருக்கலாம். ஒரு கூரையுடன் மூடப்பட்டிருக்கும். அவர்கள் ஆரம்பத்தில் பிரார்த்தனை (பாங்கு)அழைப்பு மேற்கொள்வதற்கு ஒரு புள்ளியாக இது பயன்படுத்தப்பட்டது. மினாரா என்ற சொல் கலங்கரை விளக்கம் என்ற பொருளுடைய அரபி வார்த்தையிலிருந்து உருவானது. இது மசூதிகளின் கூரை வடிவமைப்பை

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

குறிப்பிடும். குறிப்பாக இந்த அமைப்பானது மத்திய கிழக்கில் உள்ள மஸ்ஜிதுகளை அலங்கரிக்கும் சிறப்பான ஓர்அமைப்பாகும்."இந்தக் கட்டடக்கலை உறுப்பு எந்த ஆன்மீகமும் கொண்டதல்ல. இது குறியீட்டு முக்கியத்துவம் மற்றும் அழகியலை வெளிப்படுத்தும் கோபுரமாகும். இதன் உட்பகுதி பொதுவாக மலர் வடிவிலும் சில சமயம் பிற வடிவங்கள் பெற்று அழகாகக் காணப்படும்." (அமீன் எம்.ஐ.எம்(1996), முஸ்லிம்கள் வளர்த்த அழகியற்கலைகள், இலங்கை திகாரி, றேஸ்மா பதிப்பகம்.) ஒரு மசூதியின் குவிமாடம் வழக்கமாக பிரார்த்தனை மண்டபத்தை உள்ளடக்கி இருக்கும் சில மசூதிகளில் இரண்டு குவிமாடங்கள் கூட இடம்பெறுவதுண்டு.

**பிரார்த்தனைக் கூடம்:**

மையப்பகுதியில் பிரார்த்தனை செய்யும் இடமே பிரார்த்தனைக் கூடம் அல்லது பிரார்த்தனை மண்டபம் என அழைக்கப்படுகிறது. இறைவனை துதிப்போர் முழங்கால்களால் மண்டியிட்டு அமர்ந்து பிரார்த்தனை செய்வதற்கு ஏற்ற இடமாகும். மண்டபத்தின் சுவர்களில் அல்லது தூண்களில் திருக்குர்ஆனும் **' ரிஹால்'** என்ற திருக்குரானை தாங்கிப் பிடிக்கும் மரத்தாலான தாங்கியும் **'முஸல்லா'** என்னும் இறைவனின்தொழுகை விரிப்புகள் ஹதீஸ் முதலான புத்தகங்கள் ஆகியவை வைப்பதற்கான இடமும் அங்கே காணப்படும். ஆண்கள் தொழுவதற்கான பகுதியில் ஆண்கள் அணியும் தொப்பிகள் மற்றும் இறை மொழிகளைக் கூறி மணிகளை உருட்டும் மணிமாலையும் அங்கு உண்டு. அவ்வாறே பெண்கள் தொழுவதற்கான பகுதியில் அணியும் மேலாடையும் பாவாடை மற்றும் புர்கா போன்ற உடை சில இடங்களில் இருப்பதோடு மணிமாலையும் உண்டு.மேலும் சில இடங்களில் பிரார்த்தனைக்குரிய இடம் ஒரு பெரிய திறந்த வெளியாகக் கூட அமையலாம்.

**உளூ செய்யும் இடம்:**

தொழுகை செய்யும் முன் ஒவ்வொருவரும் முகம்,வாய்,நாசி, கை,கால் தலை (முடி)யின் மேற்பகுதி காது மடல்கள் கழுத்துப்பகுதி முதலானவை நனையும் வரை மூன்று முறை தூய நீரால் அலசித் தம்மைப் தூய்மைப்படுத்திக் கொண்டு தொழுகைக்குத் தயார் ஆவதே **'உளூ'** எனப்படும். பழங்காலங்களில் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் நீச்சல்குளம் போன்ற ஒரு பெரிய அமைப்பை ஏற்படுத்தி அங்கே உளூ செய்வது வழக்கம். ஆனால் தற்போது இயற்கை உபாதைகளை கழிப்பதற்கு உரிய அறைகளையும் அதனைத் தொடர்ந்து அதற்கு அடுத்த பகுதியில் வரிசையாக கற்களையும் சிமெண்ட் கற்களையும் ஒவ்வொரு குழாய்க்கு நேராகப் பதிக்கச்செய்து அதில் அமர்ந்து சிறப்பாக உளூ செய்வதற்குரிய அமைப்பை ஏற்படுத்தி அங்கேயே கை கால் கழுவுவதற்கு சோப்புப் பொருள்களும் துடைப்பதற்கு டிஷு எனும் தாளும் அங்கே வைக்கப்பட்டிருக்கும்.

**கிப்லாவும் மிஹராப்பும் :**

உலகில் உள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் கிப்லா என்னும் தொழுகை திசையான மக்காவின் காபா எனும் பள்ளிவாசலை நோக்கித் தொழும் திசையே கிப்லா எனப்படும். பிரார்த்தனை அறையின் சுவரில் இடம்பெறும் அலங்கார அரைவட்ட வடிவ அமைப்பையே மிஹராப் என்கிறோம். இதில் பல வண்ண நிறங்களில் அலங்கார வடிவங்களுடன் அம்சமான கலை நயங்கள் இடம்பெற்றிருக்கும்.

**மிம்பர்:**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பிரார்த்தனைக் கூடத்தின் முன் பகுதியில் எழுப்பப்பட்ட மேடையில் தொழுகை கற்றுத் தரும் பள்ளிவாசல் இமாம் என்பவர் ஏறி நின்று தொழுகை நடத்துவார் அதைப் பார்த்து மற்றவர்கள் அவ்வாறே தொழ வேண்டும். தொழுகைக்கு முன் அல்லது பின் பிரசங்கமும் செய்வார். அவர் கையில் ஓர் 'அசா'என்னும் செங்கோலும் இருக்கும். இந்த மிம்பர் பெரும்பாலும் செதுக்கப்பட்ட மரம், கல் அல்லது செங்கல் மூலமும் தயாரிக்கப்படுகிறது. இந்த மேடை ஏறுவதற்கு படிகளும் உண்டு. இது வலப்புறத்தில் அமைந்திருக்கும் மேடையில் பேசுபவருக்கு ஒலிவாங்கியின் நிறைய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது. பாரம்பரியமாக பயன்படுத்தும் இந்த மிம்பர் உலகம் முழுவதற்கும் இஸ்லாமிய மசூதிக்கட்டிடத்தின் ஒரு பொதுவான அம்சமாக சிறப்பான தொழுகை கற்றுத் தரும் தளமாக அமைவது மிகச் சிறப்பு. இறைவனின் இறையருள் இங்கேதான் பொழிந்து மிளிரும் என்று இஸ்லாமியர்கள் கூறுவார்கள்.

**டோம் என்னும் குவிமாடம்:**

குவி மாடம் என்பது பல்வேறு கட்டிடங்களில் காணப்படுகின்ற கட்டிடக்கலை கூறுகளில் ஒன்று. இது ஒரு வகை கூரை அமைப்பு ஆகும். இது கவிழ்த்து வைக்கப்பட்ட உள்ளீடற்ற அரைக்கோள வடிவத்தை உடையது என்றாலும் வடிவங்களில் சில மாற்றங்களையும் காணலாம். வெங்காய வடிவம் கொண்ட குவி மாடங்களும் சில இடங்களில் அரைக்கோள வடிவில் அல்லாமல் உயரம் குறைந்த கோளைக் கொண்டும் வடிவம் காணப்படும். மாஸ்கோவின் புனித பசில் தேவாலயத்தில் உள்ள குவிமாடங்கள் இவ்வகைக்கு சிறந்த சான்றாகும். இஸ்லாமிய கட்டிடக் கலை சார்ந்த கட்டிடங்களிலும் குறிப்பாக பள்ளிவாசல் கட்டிடங்களிலும் குவி மாடங்களைக் காணமுடியும். உலக மக்கள் ஒன்றாக கூடுகின்ற மக்கா , மதினா என்னும் ஊர்களில் இடம்பெற்றுள்ள பள்ளிவாசல்கள் பெரும்பாலும் இத்தகைய குவிமாடம் என்னும் அமைப்பையே பெற்றிருக்கும். குவிமாடங்கள் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட கட்டட அமைப்பாகத் திகழ்கின்றன சிமெண்ட், மரம், மண், செங்கல், கான்கிரீட், உலோகம், கண்ணாடி ஆகியவற்றால் பல நூற்றாண்டுகளாகக் கட்டப்பட்டு வருகின்றன. குவி மாட கோபுரமானது தெய்வீகம், அரசாங்கமரபுகள் போன்றவற்றுடன் தொடர்புடையவையாகக் காலப்போக்கில் உருவாக்கப்பட்டன எனலாம். “**தொல் பழங்காலக் கட்டடக்கலையில் மக்களின் வாழ்விடங்களின் அமைப்பு முறையைக் கொண்டு வீடுகளை வட்ட வடிவமைப்பு, கோல் அல்லது முட்டை வடிவமைப்பு, நீள் வெட்ட வடிவமைப்பு எனப் பிரிக்கலாம்”3என்பர்.** நவீன உலகின் கோபுரங்கள் சமயக் கட்டிடங்கள், சட்டமன்ற கூடங்கள், விளையாட்டு அரங்கங்கள், போன்ற பல்வேறு செயல்பாட்டுக் கட்டமைப்புகளில் புவி மாடங்களைக்காணலாம். **“தோடர்களின் வாழ்விடங்களில் காணப்படும் குடிசைகளில் அரைவட்ட கூரைக் குடிசைகள் இடம்பெறும்.”4என்பர்.**

**தாஜ்மஹால் :**

தாஜ்மஹால் முகலாயக் கட்டிடக் கலைக்குப் புகழ் பெற்றது. இருப்பினும் அதன் பாணி பாரசீக, ஓட்டோமான், துருக்கி மற்றும் இந்திய கட்டிடக் கலைகளின் கூறுகளை ஒருங்கிணைக்கிறது. தைமூரின் கல்லறை சமர்கண்ட் போன்ற சில திமிருட் மற்றும் முகலாய கட்டிடங்களால் ஈர்க்கப்பட்டது. டெல்லியில் உள்ள ஜும்மா மஸ்ஜித் சிறப்பான ஒரு கட்டிட கலைக்கு சான்றாகும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

ஆரம்பத்தில் முகலாயக் கட்டிடங்கள் சிவப்பு மலர் கற்களால் கட்டப்பட்டிருந்தன. ஆனால் ஷாஜஹான் மற்றும் மும்தாஜ் மஹால் ஆகியோரின் கல்லறைகளை கொண்ட அரச கல்லறை மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இது ஒரு துளையிடப்பட்ட பளிங்கு திரைக்குள் இணைக்கப்பட்டுள்ளது. அவர்களின் உண்மையான கல்லறைகள் நேரடியாக அடியில் நிலத்தடி அறையில் உள்ளன. உள் குவி மாடத்தில் கூரையுடன் கூடிய சமச்சீர் கட்டிடம் ஒன்று உண்டு.அது 24 அடி உயரமாகும். இந்த உள் குறி மாடம் சுமார் 200 அடி உயரமுள்ள ஒரு கண்கவர் வெங்காய வடிவ வெளிப்புற குவி மாடத்தால் உயர்ந்தது. இது நான்கு எண்கோண கோபுரங்களால் சூடப் பட்ட ஒரு மைய டிரம் மீது உள்ளது. ஒவ்வொன்றும் சிறிய குவிமாடம் கொண்ட பெவிலியனை ஆதரிக்கிறது. வெளிப்புற குவிமாடம் 56 அடி உயரத்தில் கில்டர் பித்தளை மூடியுடன் பொருத்தப்பட்டுள்ளது பல உயரமான அலங்கார கோபுரங்கள் (குல்தாஸ் தாக்கள்) பயணிகளின் முழுமையடைந்த சுவர்களிலிருந்து மேல்நோக்கி நீண்டு, குவி மாடத்தின் உயரத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கிறது பாரம்பரிய பாரசீக ஹிந்துஸ்தானி அலங்காரக் கூறுகளைக் கலந்து இது உருவாக்கம் பெற்றுள்ளது. கல்லறை வளாகம் மூன்று பக்கங்களிலும் சிவப்பு மணல் கல் சுவர்களால் சூழப்பட்டுள்ளது. வளாகத்திற்குள் உள்ள முக்கிய நுழைவு வாயில் ஒரு பெரிய அமைப்பாகும். அதன் பிஸ்டா வளைவுகள் அதே பாணியிலான கையெழுத்து மூலம் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக கட்டிடக்கலை தனிப்பட்ட கட்டிடங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் சமநிலையின் அழகிய உணர்வையும் அபரிமிதமான அமைதி உணர்வையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துகிறது எனலாம் தாஜ்மஹால் முழுவதும் பயன்படுத்தப்படும் வெள்ளைப் பளிங்கு மாறும் ஒலியை பிரதிபலிக்கிறது. எனவே இது முழு வளாகத்திற்கு ஒரு அமைதியான ரம்மியமான சூழலை உருவாக்கும் நுட்பமான டோம்களை அனுமதிக்கிறது. மத்திய கிழக்கு நாடுகள், ஸ்பெயின், இஸ்பஹான், இந்தியா உலக நாடுகள் பலவற்றில் மத்திய காலத்துக்குரிய சிறந்த நுட்பமான கட்டிடக்கலைகளாக இஸ்லாமியர்களின் கட்டிடக்கலைகள் விளங்குகின்றன.

**முடிவுரை:**

இஸ்லாமிய கட்டிடக் கலையைப் பொறுத்தவரை பாரம்பரிய மரபுகளுடன் அழகான கலையம்சம் மிக்க நுட்பமான திறன்கள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கும். இஸ்லாமியக் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மரபுகள் மாற்றாத வகையில் இன்று புதிதாக கட்டிடங்கள் உருவாக்கப்படுகின்றன. கட்டடக்கலை வடிவங்கள் அதன் நிர்வாகிகள், ஊடகங்களின் தொழில்நுட்ப முறைகள் வழி மாற்றங்களை உருவாக்கி அதனூடாக அழகியல் அம்சத்தையும் உள்வாங்கிக் கொண்டு நவீன மரபுகளைப் பின்பற்றிக் கட்டடக் கலைகள் மாற்றம் அடைந்து வருகின்றன. இதற்குச்சிறந்த எடுத்துக்காட்டாக மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்சா சுற்றியுள்ள கட்டிடங்கள் , ஜும்மா பள்ளிவாசல்கள் போன்றவை சான்றுகளாகத் திகழ்கின்றன எனலாம். பழைய கட்டிடக்கலை மரபிலிருந்து புதிய மரபு கட்டிடத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை பல இஸ்லாமியக்கட்டிடங்கள் வழி அறியலாம். மேலும் இஸ்லாமியக் கட்டடக்கலை, பிற பண்பாடுகளுடன் இணைந்த கட்டடக் கலையாக பல தொழில் நுட்பங்களுடன் மாற்றம் பெற்று வருவதை இக்கட்டுரை மூலம் அறியலாம். மசூதி எனும் பள்ளிவாசல்கள் எவ்வாறு கட்டப்பட்டு அதில்

பிரார்த்தனைகள் மேற்கொள்ளும் முன் உள்ள சூழல் அமைப்புகள் மற்றும் கட்டட அமைப்புகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதையும் **மேற்காணும் கருத்துக்கள் வழி உணரலாம். மேலும்,** இஸ்லாமியப் பண்பாட்டில் கட்டிடக்கலை வழிபாட்டுத் தலங்களான பள்ளிவாசல்களில் முக்கிய இடம் பெறுவதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது எனலாம். ஒட்டுமொத்தமாக கட்டிடக்கலை தனிப்பட்ட கட்டிடங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் சமநிலையின் அழகிய உணர்வையும் அபரிமிதமான அமைதி உணர்வையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

**அடிக்குறிப்பு:**

1. Palmer, A. L.. *Historical Dictionary of Architecture*. Rowman & Littlefield. பன்னாட்டுத் தரப்புத்தக எண்:978-1442263093.

2. பன்னீர்செல்வம். சு.கு.,காலக் கண்ணாடியில் இலக்கியத்தின் பார்வை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010, ப.105

**3.இராசு பவுன் துரை, தமிழக நாட்டுப்புற கட்டடக்கலை மரபு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004. ப.71**

**4.**இராசு பவுன் துரை, தமிழக நாட்டுப்புற கட்டடக்கலை மரபு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004. ப.119.

5. W. Montgomery Watt (2003). *Islam and the Integration of Society*. Psychology Press. பக். 5. பன்னாட்டுத் தரப்புத்தக எண்:978-0-415-17587-6.

**இணையதள முகவரி**

1. https://www.google.com/amp/s/ta.efferit.com
2. https://www.google.com/amp/s/jumuaammmedia.wordpress.com
3. https://www.britanica.com/topic/mosqe

**முனைவர் ஹ. அல்தாஜ் பேகம்,**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை - ஆய்வு மையம்,**
**ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி , குற்றாலம்.**
**தென்காசி மாவட்டம் , 627802 , தமிழ்நாடு.**